O.S.220-2023

# முதன்மை மாவட்ட நீதிமன்றம், புதுக்கோட்டை

## அ.வ.எண்.220/2023

வாதி தரப்பு 2வது சாட்சி மெ. ரெத்தினகுமார் என்பவரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திருமதி. அனுராதா, கிரேடு-1 பெஞ்ச் க்ளார்க் என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. மெ. ரெத்தினகுமார் | வயது | : | 60/2025 |
| தகப்பனார் பெயர் | : | மெய்யப்பன் | தாலுகா | : | அறந்தாங்கி |
| கிராமம் | : | மேல்மங்களம் | தொழில் | : | பத்திர எழுத்தர் |

நாள்-11.06.2025

வா.சா.2

**<u>முதல் விசாரணை</u>**

1) இந்த நீதிமன்றத்திலிருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின் பேரில் நான் சாட்சி சொல்வதற்கு வந்திருக்கிறேன். எனக்கு தொழில் பத்திரம் மற்றும் ஆவணங்கள் எழுதுவது. எனது பத்திர எழுத்தர் உரிமம் எண்.1093/1991 ஆகும்.

2) என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்த ஆவணத்தை நான்தான் தயார் செய்தேன். அதில் எனது புகைப்படமும் ஒட்டப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1-ஐ தயார் செய்வதற்கு தேவையான விபரங்களை எனக்கு 1-வது பார்ட்டி முருகன் என்பவர் என்னிடம் சொன்னார். மேற்படி வா.சா.ஆ.1-ஐ தயார் செய்தது நான்தான் என்று அதில் எனது கையொப்பம் இட்டிருக்கிறேன்.

3) மேற்படி ஆவணத்தை தயார் செய்வதற்கு எனக்கு பாகப்பிரிவினை பத்திரம் மற்றும் செட்டில்மெண்ட் ஆவணம் ஆகியவற்றின் நகல்களை என்னிடம் தாக்கல் செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை வேறு ஒரு தேதிக்கு மாற்றி வைக்கப்பட்டது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
புதுக்கோட்டை.